## வேதாரண்யம் தலைஞாயிறு பகுதியில்

# ரூ.61 இலட்சம் மதிப்பில் கட்டிடங்கள்!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, ஏப். 24-

நாகை மாவட்டம் வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ61 லட்சம் மதிப்பில் பல்வேறு கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் முன்னிலை வகித்தார் கட்டிடங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஜெயபிரகாஷ் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கமறைமலை, மாவட்ட துணை செயலாளர் சோ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர் மகா.குமார், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, வேதாரண்யம் நகரக் கழக செயலாளர் மா.மீ. புகழேந்தி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் வேதாரண்யம்; மற்றும் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் பல்வேறு கட்டிடங்களை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்து பேசுகையில்,

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் வண்டுவாஞ்சேரி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி கட்டடம் பழுதடைந்து பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் இருந்ததால் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்ட முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி 2024 - 2025 திட்டத்தின் கீழ் ரூ.8,55,000 மதிப்பீட்டிலும் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் 2024 - 2025 திட்டத்தின் கீழ் ரூ.8,00,000 மதிப்பீட்டிலும்; என மொத்தம் ரூ.16,55,000 மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 54.05 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடம் கட்டும் பணிநிறைவடைந்துள்ளது. இந்த அங்கன்வாடியில் வகுப்பறை, குழந்தைகளுக்கான கழிவறை, சமையல்கூடம், பொருள்கள் வைப்பறை, மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் சாய்தள நடைபாதை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் கழிவறை ஆகியவைகள் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டடம் தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் வண்டுவாஞ்சேரி ஊராட்சி செயல்பட்டு வரும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் பழுதடைந்து பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் இருந்ததால் புதிய கிராம செயலகம் கட்டடம் கட்ட முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டது அதன்படி அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி 2024 - 2025 திட்டத்தின் கீழ் ரூ.25,65,000 மதிப்பீட்டிலும் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் 2024 - 2025 திட்டத்தின் கீழ் ரூ.20,00,000 மதிப்பீட்டிலும்; என மொத்தம் ரூ.45,65,000 மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 133.36 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. இந்த புதிய கிராம செயலகம் கட்டடத்தில் ஊராட்சிமன்ற தலைவருக்கு தனி அறை, கிராம நிர்வாக அலுவலக அறை, ஊராட்சி செயலர் அறை, கூட்ட அரங்கம், பொருள் வைப்பறை, மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் சாய்தள நடைபாதை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் கழிவறை ஆகியவைகள் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்ட தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

அதனைத்தொடர்ந்து தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் நீர்முளை ஊராட்சியில் ஊரகவளர்ச்சித்துறை சார்பில் மறுசீரமைக்கப்பட்ட கிராம ஊராட்சி திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி இணை சேவை மைய கட்டிடத்தினை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

முன்னதாக நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நீலா தெற்கு வீதியில் உள்ள பொன்னி சித்திர கடல் ஓவிய பயிற்சி மையத்தில் மாவட்ட கல்வி தன்முனைப்பு திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் பனை ஓலையில் அமைக்கப்பட்ட கூடுதல் வகுப்பறையினை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பொன்னி சித்திர கடல் ஓவிய பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களையும், பொன்னி சித்திர கடல் ஓவிய பயிற்சி மைய மாணவர்கள் வரைந்த ஓவிய முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.

---

## கழக துணைப் பொதுச் செயலாளர் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

# கோவை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் அறிமுக பாசறைக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!







கோவை, ஏப்.24-

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஒன்றிய , நகர, பேரூர், பகுதிக் கழக நிர்வாகிகள் அறிமுக ஆலோசனை மற்றும் பாசறைக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன்,

வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு: நாளை (25.4.2025, வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், கோவை, முதலிபாளையம், எம்.என்.சி.ஆர் கிராண்ட் பேலஸ் அரங்கில் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழகத்தின் சார்பில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழக நிர்வாகிகள் அறிமுக ஆலோசனை மற்றும் மகளிர் பாசறைக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் செ.உமாமகேஸ்வரி வரவேற்புரையாற்றுகிறார். கழக மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், கழக மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர்கள் நா.மாலதி நாகராஜ், சத்யா பழனிக்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் கவிதா பிரசாத் (தெற்கு), அன்னம்மாள் ராஜா (மாநகர்), ரதி மனோகர் (வடக்கு), மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் சி.ஆர்.கனிமொழி (மாநகர்), டி.வி.ரங்கநாயகி (வடக்கு) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமை தாங்கி சிறப்புரையாற்றுகிறார். இதில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி.,

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணி மேற்கு மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் நாமக்கல் ப.இராணி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர், அவைத்தலைவர், முனைவர்.கணபதி ராஜ்குமார் எம்.பி., பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி எம்.பி., கோவை மாநகராட்சி மேயர் கே.ரங்கநாயகி ஆகியோர் சிறப்புரை வழங்க உள்ளனர்.

தெற்கு மாவட்ட மகளிரணி ஜெ.ஜெயலலிதா நன்றியுரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த மகளிர் பாசறைக் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், துணை மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

---

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் லெம்பலக்குடி

# தி.மு.க. மாணவரணி சார்பில் உறுப்பினர் சேர்க்கை!

### அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை,ஏப். 24-

தமிழ்நாட்டில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு பாராட்டைப் பெற்று வருகிறது. இதில் தமிழ்நாடு அரசு மாணவர்களின் கல்விக்கு அதிகளவு முக்கியத்துவம் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதனால் மாணவர்கள் கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசிற்கு ஆதரவளித்து வருகின்றனர். இந்நிலையில் தி.மு.க. அரசின் உறுப்பினர் எண்ணிக்கையை பலப்படுத்தும் விதமாக தி.மு.க. மாணவர் அணியினர் மாணவர் உறுப்பினர் சேர்க்கையை விரிவுபடுத்த வேண்டும் என தலைமைக் கழகம் சார்பில் மாணவர் அணியினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் திருமயம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட லெம்பலக்குடி கிராமத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் தி.மு.க. மாணவரணி சார்பில் மாணவர் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

அப்போது மாணவர்களிடையே அமைச்சர் ரகுபதி கல்லூரி மாணவர்களுக்கு முதலமைச்சர் தளபதி தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் நான் முதல்வன், புதுமைப்பெண் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து விளக்கினார்.

மாணவரணி மாநில துணைச் செயலாளர் மண்ணை சோலைராஜன் மாணவர் உறுப்பினர் சேர்க்கையை மேற்பார்வையிட்டார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் திருமயம் ஒன்றிய செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா.கணேசன், இரா.மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, மாணவரணி ராஜா பெரியண்ணன், பாலசுப்பிரமணியன், வின்சென்ட் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.கே கார்த்திக்குமார் செய்திருந்தார்.




சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் ஆத்தூரில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் அப்பாதுரை முன்னிலையில், கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், டாக்டர் செழியன், பாலசுப்பிரமணியம், ஏ.ஏ. ஆறுமுகம், முருகப்பிரகாஷ், பர்கத் அலி, ராமச்சந்திரன், சம்பத்குமார், ஸ்டீல் ராஜா, கிஷோர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# வில்லிவாக்கத்தில் அறுசுவை உணவு!

சென்னை, ஏப். 24-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 62வது நாள் வில்லிவாக்கம் மேற்குபகுதி இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 62ஆம் நாளான முதலமைச் சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு வழங்கப்பட்டது.

---

# கலைஞரின் "இனியவர்", கழகத்தின் செல்வம்!



**அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் 85 ஆவது பிறந்த நாள் இன்று ( 24.4.2025 ) ! 2024 அக்டோபர் 10 அன்று இரவு படுக்கச் சென்றவர், நமையெல்லாம் பரிதவிக்கவிட்டுப் பறந்தே போய்விட்டார். அவர் நாம் திகைக்கவும், தேம்பவும் திடீரென மறைந்துவிட்டாலும், 'முரசொலி'யும், அதன் உயிரான கழகமும் வாழும் நாள்வரை, அண்ணன் செல்வம் அவர்களின் திருப் பெயரும், பெருமையும், மாறாது, மறையாது, மாயாது, தேயாது !**

தம் தமக்கையின் மகனான - அண்ணன் செல்வம் அவர்களுக்கு, "பன்னீர் செல்வம்" என்று பெயர் இட்டழைத்தார் கலைஞர்.

இலண்டனில் பிரிட்டன் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இந்திய அமைச்சரின் ஆலோசகராக நியமிக்கப் பட்டிருந்த நீதிக் கட்சியின் தளபதி சர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள், 1940 மார்ச் 11 அன்று பதவியேற்றிட வேண்டும் என்பதற்காக, மார்ச் முதல்நாள் புறப்பட்டுச் சென்ற விமானம் கடலில் விழுந்தது; நீதிக் கட்சி நீங்காத சோகக் கண்ணீர்க் கடலில் மூழ்கியது. நம் முன்னோரிடையே கப்பிய சோகம் சற்றும் சுருங்காமலும், கொஞ்சமும் கரையாமலும் நகர்ந்து கொண்டிருந்த அந்தக் காலக் கட்டத்திலேதான், 1940 ஏப்ரல் 24ல் பிறந்தார் அண்ணன் செல்வம். அதனால் அவருக்கு, சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் நினைவாக, பன்னீர் செல்வம் எனப் பெயர் சூட்டினார் கலைஞர்.

சர்.ஏ.டி.பன்னீர் செல்வம், ஓமான் கடலில் திடீரென வீழ்ந்து மூழ்கிய விமானத்தோடு மறைந்தார். முரசொலி செல்வம் அவர்களை, சாவுக் கடல் திடீரென, யாரும் சற்றும் எதிர்பாராத வகையில், வாரி இழுத்து விழுங்கிக் கொண்டுவிட்டது.

**"கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன், வெடுக்கென வீழ்ந்தான் கடலில் என்றால், வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?" என்று, சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் அவர்களின் மறைவு குறித்து, மிக இளம் வயதிலேயே கலைஞர், கண்ணீர்க் கவிதை எழுதினார்! அந்தக் கண்ணீரும், கவிவரிகளும், முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கும் பெருமளவு பொருந்தும் அன்றோ !**

1942ல், பதினெட்டு வயதிலேயே, "முரசொலி" ஏட்டினைத் தொடங்கித் தொடர்ந்து நடத்திய கலைஞர், அதன் நிறுவனரும், ஆசிரியரும் ஆனார். அண்ணா அமைச்சரவையில் கலைஞர் இடம் வகித்ததால், அண்ணன் மாறன் அவர்கள் ஆசிரியர் ஆனார். அவர் ஒன்றிய அமைச்சரானதும், முரசொலியின் ஆசிரியர் ஆனார் அண்ணன் செல்வம் அவர்கள். இவ்வாறு கலைஞரும், மாறனும் அமர்ந்திருந்த ஆசிரியர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர் செல்வம்! **முரசொலியின் நீண்ட சரித்திரத்தில், "முரசொலி" எனும் பட்டப் பெயருடன் இருவர் மட்டுமே; ஒருவர் முரசொலி மாறன், மற்றொருவர் முரசொலி செல்வம் ! கலைஞரின் மனசாட்சி மாறன்; முரசொலியின் மனசாட்சி செல்வம் !**

வாழையடி வாழையாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருந்தவர் அண்ணன் செல்வம் என்றாலும், திராவிட இலட்சியத்தின் மேன்மையையும், அதனை அடைந்திட மேற்கொள்ள வேண்டிய உழைப்பின் அளவையும், ஆழத்தையும் அறுதியிட்டு அறிந்திருந்தவர் அவர். அதனை அவர், **"இலட்சியமென்பது எட்டிப் பறித்திடும் மல்லிகை அல்ல; எதிர் நீச்சல் ! எரிமலை மேல் கொடி நாட்டல்"** என்று, பொறுப்பின் நெருப்பன்ன தன்மையினை எடைபோட்டுச் சொல்லியிருக்கிறார். அவரே சொன்னபடி, எதிலும், எப்போதும், எச்சரிக்கையாகவும், கனிவும், இனிமையும் கடுகளவும் குறைந்திடாமலும், முரசொலி ஆசிரியர் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றி வந்தார்.

அண்ணன் செல்வம் அவர்கள் முரசொலி ஆசிரியராக, எண்ணற்ற முறை எதிர் நீச்சல் போட்டிருக்கிறார்; இன்முகத்துடன், எரிமலை மீதேறியிருக்கிறார். நெருக்கடி நிலை காலத்தில், எழுத்து சுதந்திரம் காத்திடும் ஜனநாயகப் போரில் கலைஞருடன், முரசொலி செல்வம் அவர்களும் கைது செய்யப்பட்டுத் திருவல்லிக்கேணி காவல்நிலையத்தில் வைக்கப்பட்டார். திருச்செந்தூர் 'சுப்பிரமணிய சம்ஹாரம்' எனப்படும், அறங்காவல் துறை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மர்மச்சாவு தொடர்பான 'பால் கமிஷன்' அறிக்கை வெளியானதில், அண்ணன் செல்வம் அவர்கள், காவல் துறையினரின் கடும் அத்து மீறல்களுக்கு ஆளாக்கப் பட்டு, கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் உரிமைப் பிரச்சினை தொடர்பாக ஒருமுறை கைது செய்யப்பட்டார். அந்தக் கைதுதான், சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத, பொல்லாத புதுமையாக, நவீன கொடுங்கோல் நிகழ்வாக, புதியதாக உருவாக்கப்பட்ட கூண்டொன்றில் ஏற்றி, 'கண்டனம்' வாசிக்கும் வரை நீண்டது; அப்படி நீண்டதால், நிலையான சரித்திர அத்தியாயத்தை உருவாக்கி, பேரவைக்கும், அண்ணன் செல்வம் அவர்களின் வாழ்க்கைக்கும் சேர்த்தது.

**"வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால், என்னகம் வாடிப் போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன் - படத்தில் செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு!... கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்"** என்ற கலைஞரின் கடிதம், கழகக் கருவூலத்தின் அங்கம் !

அந்தக் கடிதத்திலேயே; அஞ்சுகத் தாயார் கலைஞரிடம் **'உனக்கு ஒரு பெண் பிறந்தால், அதற்கு செல்வி எனப் பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டும்'** என்று அன்புக்கட்டளை பிறப்பித்ததையும்; அண்ணன் செல்வம் அவர்கள், கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்த பண்பாட்டையும்; அறிஞர் அண்ணா அவர்கள், **"செல்வா"** என அன்பொழுக அழைத்து வந்த பழக்கத்தையும்; அவர் மூலம் முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லி அனுப்பியதையும்; அண்ணா அவர்கள் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் செல்வம் அவர்களைக் காண நாட்டம் கொண்டு, அவரை அருகழைத்து அன்பைப் பொழிந்ததையும், அவருக்கே வாய்த்த சொக்க வைக்கும் தமிழில் சுட்டிக் காட்டியிருக்கிறார் கலைஞர் !

**"போற்றுதலுக்குரிய கலைஞரும், மரியாதைக்குரிய மாறனும் இல்லாத நிலையில், அவர்களது இடத்தில் இருந்து வழிநடத்தும் அன்புக்குரியவராக செல்வம் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை, எனக்குக் கிடைத்த பெருமையாக நினைக்கிறேன்"** என்றார் நமது திராவிட நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்பு. **" தி.மு.க.வைப் பற்றியோ, கலைஞரைப் பற்றியோ, என்னைப் பற்றியோ, ஏதாவது விமர்சனம் வந்தாலும், உடனடியாகப் பேனாவைத் தீட்டி விடுவார் அண்ணன் செல்வம்!"** என்று இப்போதும் குறிப்பிட்டுள்ளார் அவர்!.

**அண்ணன் செல்வம் அவர்கள், முரசொலியோடு வளர்ந்தவர், முரசொலியை வளர்த்தவர். முரசொலிக்கு ஆற்றும் பணியை, கலைஞருக்கு நேரடியாக ஆற்றும் பணியாகக் காலமெல்லாம் ஆர்ப்பாட்டமின்றி, அமைதியாக, ஆற்றலுடன் ஆற்றியவர். கலைஞரை ஆசானாகக் கொண்டு, முரசொலியைப் பாடமாகப் படித்தவர், பயிற்றுவித்தவர். அவரால் பலன் பெற்றோர் பல்லாயிரம். இரக்க குணமும், இனிய பண்பு நலன்களும், இமாலயத் தலைவரின் மருமகன் ஆயினும் இமைப் பொழுதும் கர்வப் படாத இயல்பும், அவர் சராசரி மனிதர் அல்ல, மிகமிக உயர்ந்த மனிதர் என்பதை திராவிட உலகுக்கு உணர்த்தும் !**

சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களைத் **" திராவிட ரத்தினம்"** என்றார் அண்ணா. கலைஞர் அவர்களால் - பாசத்தோடும் நேசத்தோடும் வளர்த்து ஆளாக்கப்பட்டு, **" இனியவன் என் செல்வம்"** என நெகிழ்ச்சியுடன் போற்றப்பட்ட முரசொலி செல்வம் அவர்களைக் **"கழகத்தின் ரத்தினம்"** என்றழைப்பது எவ்வளவு பொருத்தம் !

• • •

**கி.இராஜமாணிக்கம்**

• • •